## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 30/ந/2025

நாள் : 17.06.2025

திரு.P.S.சிவகுரு,
M/s.Ourland Engineering Works (P) Ltd.
சென்னை – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பெரம்பலூர் நகராட்சி, பெரம்பலூர் – எதிர்மனுதாரர்

சென்னை, தியாகராய நகர், திருமூர்த்தி நகர், திருமலை சாலை, கதவு எண்.25 என்கிற முகவரியில் வசிக்கும் M/s.Ourland Engineering Works Private Ltd. –ன் இயக்குநர் திரு.P.S.சிவகுரு என்பவரின் **16.12.2024** நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் **18.12.2024** அன்று பெறப்பட்டு, 30/ந/2025 என்று எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

### ஆணை

சென்னை, தியாகராய நகர், திருமூர்த்தி நகர், திருமலை சாலை, கதவு எண்.25 என்கிற முகவரியில் வசிக்கும் M/s.Ourland Engineering Works Private Ltd. –ன் இயக்குநர் திரு. P.S.சிவகுரு என்பவர் தமது **16.12.2024** நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

“ Failure to pay final project amount, EMD and deductions amounting to nearly Rs.50,00,000/- (Rupees Fifty lakhs only). The brief disputes is as follows:

We successfully executed a Bio-Mining project vide Work Order ROC.No.00664/2018/E2 at Perambalur Municipality. The Perambalur Municipality engaged the Centre for Environmental Studies (CES), Anna University, Chennai as Project Management Consultant to assess the progress of work by periodic site visits, volume measurements, observations at the site and review of records. Upon successful completion of the Project, the CES team filed Project completion report in October, 2022. It was explicitly recorded in the report that "During the period from July 2019 to July 2021, a cumulative volume of 45,229 $m^3$ has been recommended for payment. Hence it is recommended that the payment can be released for a volume of 3155 $m^3$ for the period of August 2021 to September 2022 as mentioned in Table 6".

Despite the successful completion of the assigned project, we regret to inform that we have not received the final payment, a specific deducted amount, and the Earnest Money Deposit (EMD) amount, which was initially deposited at the time of tender, totally amounting to nearly Rs.50,00,000/- (Rupees Fifty lakhs only). Multiple letters addressing this matter have been submitted (letters dated 14.02.2024 and 29.05.2024) outlining our concerns and seeking a resolution, yet no payment has been made till date. This is particularly shocking since more than two years have lapsed since the completion of the Project. Further, the CES team has certified our completion and also expressly confirmed the terms of our payment.

However, Perambalur Municipality refused to release our rightful payments.

Hence, the present complaint is to release of these pending payments, including the accrued interest for the delay in settling the aforementioned amounts from the due date till the date of payment." என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீது விரிவான அறிக்கை கோரி இம்முறைமன்ற நடுவ 13.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெரம்பலூர் நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

3. பெரம்பலூர் நகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க.908/2022/இ1, நாள்.04.03.2025–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

"இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் 2018–2019 ஆம் ஆண்டு திட்ட நிதியின் கீழ் ரூ.318.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சிக்கு சொந்தமான உரக்கலவை கிடங்கில் உள்ள பழைய குப்பைகளிலிருந்து நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் பணியை M/s. Ourland Engineering Works (P) Ltd. T.Nagar, Chennai என்ற நிறுவனம் செய்து வந்தது.

மேற்படி நிறுவனத்தினால் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளவாறு அளவுகள்/மேலளவுகள் செய்யப்பட்டு பின்வருமாறு மூன்று பகுதிகளாக பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளதை ரொக்கப்புத்தகத்தின் மூலம் கண்டறியப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| Sl. No. | Estimate (Rs.in lakhs) | Bill details | Part bill amount | Deduction details | | | | | | Gross amount |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ASD | IT | VAT GST | LPSD | LWF | TOTAL | |
| 1 | 318.00 lakhs | 1st Part Bill | 7912083 | 318000 | 158242 | 158242 | 395604 | 318000 | 1348088 | 6563995 |
| 2 | | 2nd Part Bill | 11483794 | 0 | 229676 | 229676 | 574190 | 0 | 1033542 | 10450252 |
| 3 | | 3rd Part Bill | 11056538 | 0 | 221131 | 221131 | 552827 | 0 | 995089 | 10061449 |
| | | | **30452415** | **318000** | **609049** | **609049** | **1522621** | **318000** | **33766719** | **27075696** |

மேற்படி பணியின் திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.318.00 இலட்சம். இப்பணிக்கு மூன்று பகுதியாக பட்டியல் தொகை ரூ.3,04,52,415/– மட்டும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்ததாரர் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளவாறு (3,18,00,000 – 3,04,52,415 = 13,47,584/–) மீதம் ரூ.13,47,584/– மட்டும் நிலுவையில் உள்ளதை வழங்கிட கோரி தமிழ்நாடு உள்ளாட்சி OMBUDSMAN அமைப்பில் புகார் மனு அளித்துள்ளார். அதன் விபரம் கீழ்கண்டுள்ளவாறு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்படி ஒப்பந்ததாரருக்கு பகுதி இறுதிப்பட்டியல் (Part & Final bill) தொகை வழங்குவது தொடர்பாக கோப்புகள் மற்றும் அளவுப்புத்தகம் (Measurement Book) ஆகியவற்றின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்க கோரப்பட்டமைக்கு மேற்படி கோப்பு அலுவலகத்தில் இல்லை என இருக்கை எழுத்தரால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, இந்நகராட்சியின் அனைத்து பிரிவு இருக்கை எழுத்தருக்கும் குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது. இதர பிரிவுகளிலும் இக்கோப்பு இல்லை என தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில் ஒப்பந்ததாரருக்கு பகுதி இறுதி பட்டியல் தொகை வழங்குவது தொடர்பாக அண்ணா பல்கலைகழகம் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள பணிமுடிவு அறிக்கையின்படி தொகை வழங்குவதற்கு மேற்படி வேலை நடைபெற்றபோது இந்நகராட்சியில் பணிபுரிந்த அலுவலர்கள் இப்பணியினை அளவுகள் மற்றும் மேலளவுகள் செய்யப்பட்டு அதற்கான விபரத்தினை அளவுபுத்தகத்தின்படி (M.Book) சமர்ப்பிக்க தெரிவித்து குறிப்பாணை வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொறியாளர்/உதவிபொறியாளரால் பதிவு செய்யப்பட்டுள்ள அளவுபுத்தகத்தின்படி (M.Book) மீதமுள்ள தொகையும் 5% (Performance Security Deposit) பணிதரகாப்பு தொகையினையும் சேர்த்து ஒப்பந்ததாரருக்கு விரைவில் பட்டியல் தொகை வழங்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது” என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு.P.S.சிவகுரு, இயக்குநர், M/s. Ourland Engineering Works (P) Ltd. Chennai அவர்களையும் மற்றும் எதிர்மனுதாரரான பெரம்பலூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 17.03.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவ 10.03.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**5.** மனுதாரர் திரு.P.S.சிவகுரு M/s.Ourland Engineering Works (P) Ltd.Chennai **17.03.2025–ம்** தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“எனக்கு பெரம்பலூர் நகராட்சியில் வழங்கப்பட்ட பணி ஆணை எண்.Roc.No.00664/2018/E12–ன் மூலம் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு உண்டான பட்டியல் தொகை, மற்றும் முன் வைப்புத்தொகை (EMD) ஆகியவை வழங்கப்படவில்லை.

எனக்கு பெரம்பலூர் நகராட்சியில் இருந்து வழங்கப்பட வேண்டிய பட்டியல் தொகை மற்றும் முன் வைப்புத்தொகை தொடர்பான புள்ளி விவரக்கணக்குகளை இன்னும் மூன்று தினங்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கிறேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்”.

**6.** பெரம்பலூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.**908/2022/இ1**, நாள்.**14.03.2025–ல்** “தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடர் **14.03.2025** முதல் தொடங்கி நடைபெறுவதால் **25.03.2025** அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானிய கோரிக்கை நடைபெற உள்ளதால் நகராட்சி ஆணையாளர்கள், பொறியாளர்கள், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் மற்றும் இதர அலுவலர்கள் மேற்படி சட்டமன்ற கூட்டதொடர் முடியும் வரை அனுமதியின்றி தலைமையிடத்தை விட்டு செல்லக்கூடாது எனவும், அரசிடமிருந்து கோரப்படும் கேள்விகள் மற்றும் தகவல்களுக்கு உடனடியாக பதில் அளிக்கும் வகையில் உரிய பணியாளர்களை தயார் நிலையில் வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, **17.03.2025** அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை அலுவலகத்தில் நடைபெற உள்ள விசாரணைக்கு நேரில் ஆஜராவதற்கு பதிலாக மேற்படி, விசாரணைக்கு வேறொரு மாற்று தேதியை வழங்கிட வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது” எனக்கோரியுள்ளார்.

**7.** பெரம்பலூர் நகராட்சி ஆணையரின் வேண்டுகோள் மற்றும் மனுதாரர் அவருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை குறித்த புள்ளி விவரங்களை சமர்ப்பிக்க காலம் கோரியதைத் தொடர்ந்து, **08.04.2025** அன்று விசாரணைக்கு வரும்படி மனுதாரருக்கும், நகராட்சி ஆணையருக்கும் இம்முறைமன்ற நடுவ **19.03.2025** நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**8.** மனுதாரர் **08.04.2025** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

“எங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகைக்கான வழங்கிட மூன்று பகுதிகளான பட்டியல்களை பெரம்பலூர் நகராட்சியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. 2020–21 கொரானா தொற்று காலகட்டமாக இருந்ததால், மேற்படி தொகை வழங்கப்படாமல் நிலுவையில் இருந்து வந்தது.

தற்பொழுது இம்முறைமன்றத்தில் மனு செய்ததை தொடர்ந்து, எங்களுக்கு வழங்கப்பட வேண்டிய முழுத் தொகையான ரூ.28,70,205/– (ரூபாய் இருபத்தி எட்டு இலட்சத்து எழுபதாயிரத்து இருநூற்றி ஐந்து மட்டும்) 07.04.2025 அன்று வழங்கப்பட்டது.

இம்முறைமன்றத்தின் வெளிப்படையான நடவடிக்கையால் எங்களது கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளமைக்கு எங்களது நன்றியினை தெரிவித்துகொள்கிறோம்.

மேற்காணும் எங்களுக்கு சேரவேண்டிய முழுத் தொகையான ரூ.28,70,205/– (ரூபாய் இருபத்தி எட்டு இலட்சத்து எழுபதாயிரத்து இருநூற்றி ஐந்து மட்டும்) பெறப்பட்டு, ஒப்புகை சீட்டு வழங்கப்பட்டு விட்டதால், எங்களது புகார் மனுவின் மீதான நடவடிக்கையினை கைவிடுமாறும், இத்துடன் இப்புகார் மீதான வழக்கினை முடித்து வைக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

9.பெரம்பலூர் நகராட்சி ஆணையரின் சார்பாக பெரம்பலூர் நகராட்சி உதவியாளர் 08.04.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை தெரிவித்துள்ளார்.

"மனுதாரரின் கோரிக்கையின்படி மனுதாரர் செய்து முடித்த பணிக்கான பட்டியல் தொகை ரூ.13,47,584/– மற்றும் ஏற்கனவே வழங்கப்பட்ட 3 பகுதி பட்டியல்களில் பிடித்தம் செய்யப்பட்ட பணிதரகாப்பு தொகை (PSD) ரூ.15,22,621/– ஆக கூடுதல் தொகை ரூ.28,70,205/– மட்டும் மேற்படி ஒப்பந்த நிறுவனமான M/s. Ourland Engineering Works(P) Ltd. என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு விட்டது.

மேற்படி நிறுவனத்தினால் மேற்படி தொகை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் கடிதம் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. மேற்படி பணிக்கான பணிமுடிவறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே மனுதாரரின் புகார் மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதால் மேற்படி நிறுவனத்தின் புகார் மனுவினை மேல் நடவடிக்கையின்றி முடித்து வைக்க வேண்டுமாய் இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**10.** மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம், பெரம்பலூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி உதவியாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் மிகவும் கவனமுடன் முழுமையாக பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரரது வாக்குமூலத்தில் தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகைக்கான பட்டியல்களை பெரம்பலூர் நகராட்சியிடம் சமர்ப்பிக்கப்பட்டது எனவும், 2020–21 கொரொனா தொற்று காலகட்டமாக இருந்ததால், மேற்படி தொகை வழங்கப்படாமல் நிலுவையில் இருந்து வந்ததாகவும், தற்பொழுது இம்முறைமன்றத்தில் மனு செய்ததை தொடர்ந்து தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய முழுத்தொகையான ரூ.28,70,205/–(ரூபாய் இருபத்தி எட்டு லட்சத்து எழுபதாயிரத்து இருநூற்றி ஐந்து மட்டும்) 07.04.2025 அன்று வழங்கப்பட்டது எனவும் இம்முறைமன்றத்தின் வெளிப்படையான நடவடிக்கையால் தங்களது கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளமைக்கு எங்களது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம் எனவும், எங்களுக்கு சேர வேண்டிய முழுத்தொகையான ரூ.28,70,205/– (ரூபாய் இருபத்திஎட்டு லட்சத்து எழுபதாயிரத்து இருநூற்றி ஐந்து மட்டும்) பெறப்பட்டு, ஒப்புகை சீட்டு வழங்கப்பட்டு விட்டதால்,

தங்களது புகார் மனுவின் மீதான நடவடிக்கையினை கைவிடுமாறும், புகார் மீதான வழக்கினை முடித்து வைக்குமாறும் இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொண்டிருப்பது அறிய முடிகிறது.

பெரம்பலூர் நகராட்சி ஆணையர் சார்பில் ஆஜரான நகராட்சி உதவியாளரின் வாக்குமூலத்தில், மனுதாரரின் கோரிக்கையின்படி மனுதாரர் செய்து முடித்த பணிக்கான பட்டியல் தொகை ரூ.13,47,584/– மற்றும் ஏற்கனவே வழங்கப்பட்ட 3 பகுதி பட்டியல்களில் பிடித்தம் செய்யப்பட்ட பணிதரகாப்பு தொகை (PSD) ரூ.15,22,621/– ஆக கூடுதல் தொகை ரூ.28,70,205/– மட்டும் மேற்படி ஒப்பந்த நிறுவனமான M/s.Ourland Engineering Works (P) Ltd. என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு விட்டது என்றும் மேற்படி நிறுவனத்தால் மேற்படி தொகை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் கடிதம் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது எனவும், மேற்படி பணிக்கான பணிமுடிவறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றும், மனுதாரரின் புகார்மனு மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதால் மேற்படி நிறுவனத்தின் புகார் மனுவினை மேல் நடவடிக்கையின்றி முடித்து வைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டிருப்பதும் அறிய முடிகிறது.

இந்நேர்வில் மனுதாரரின் புகார் மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டு, தொகை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் கடிதமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இவ்வழக்கை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, ஜுன் திங்கள் 17–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.P.S.சிவகுரு, இயக்குநர்
M /s.Ourland Engineering Works (P) Ltd.
No.25, Atandra Towers, 3rd.Floor,
Thirumalai Road, Thirumurthy Nagar,
T.Nagar,
Chennai – 600 017.

2) நகராட்சி ஆணையர்,
பெரம்பலூர் நகராட்சி,
பெரம்பலூர்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்